# BSNL ஊழியர்சங்கம்

## தமிழ்மாநிலம்

**சுற்றறிக்கைஎண்:160** **தேதி:-29.07.2014**

# சிறப்புடன் நடைபெற்ற தஞ்சை மாவட்ட மாநாடு

அன்பார்ந்த தோழர்களே,

நமது BSNL ஊழியர் சங்கத்தின் 7ஆவது தஞ்சை மாவட்ட மாநாடு, தனது பாட்டு திறத்தாலே தமிழக மக்களின் நெஞ்சை கொள்ளைக் கொண்ட கல்யாண சுந்தரனார் பிறந்த பட்டுக்கோட்டையில் 26.07.2014 அன்று இராமச்சந்திரா திருமண மண்டபத்தில் மாவட்ட தலைவர் தோழர் A.இருதயராஜ் தலைமையில் சிறப்புடன் நடைபெற்றது.

மாவட்ட பொருளாளர் தோழர் S.N.செல்வராஜ் தேசியக் கொடியினையும், மாநில செயலாளர் தோழர் S.செல்லப்பா அவர்கள் நமது சங்கக் கொடியினையும் விண்ணதிரும் கோஷங்களுக்கும், வெடிகளுக்கும் இடையே கம்பீரமாக ஏற்றி வைத்தனர்.

வரவேற்புக் குழுவின் செயலாளர் தோழர் D.அசோகன் வந்திருந்த அனைவரையும் வரவேற்க, பொருளாளர் தோழர் M.கலைச்செல்வி அவர்கள் அஞ்சலி உரை நிகழ்த்தினார். பின்னர் BSNL ஊழியர் சங்கத்தின் மாநில உதவி செயலாலர் தோழர் A.பாபு ராதாகிருஷ்ணன் மாநாட்டை துவக்கி வைத்து உரை நிகழ்த்தினார். அதற்கு பின் நடைபெற்ற பொது அரங்கினில் தோழர் R.புண்ணியமூர்த்தி AIIEA, தோழர் R.ஞானசூரியன் TNGEA, தோழர் T.பன்னீர் செல்வம் NFTE, தோழர் N.வீரபாண்டியன் AIBSNLEA, தோழர் K.பழனியப்பன் SNEA, தோழர் R.கிருஷ்ணராவ் AIBSNLOA ஆகியோரும், நிர்வாகத்தின் சார்பில் திரு S.விஜயகுமார் DGM(CFA), திருமதி S.சந்திர குமாரி DGM(CM), திரு M.மாரியப்பன் DGM(FIN) ஆகியோரும் வாழ்த்துரை வழங்கினார்கள். இறுதியில் BSNL ஊழியர் சங்கத்தின் மாநில செயலாளர் தோழர் S.செல்லப்பா சேவை தொடர்பாக நமது சங்கத்தின் நிலைபாடுகளை தெளிவாக எடுத்துரைத்தார்.

சங்கத்தின் மாவட்ட செயலாளர் தோழர் D.சுப்ரமணியன் முன்வைத்த செயல்பாட்டு அறிக்கையினையும், மாவட்ட பொருளாளர் தோழர் S.N.செல்வராஜ்

முனவைத்த வரவு செலவு அறிக்கையினையும் சார்பாளர்களின் விவாதத்திற்கு பின் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதற்கு பின்னர் நடைபெற்ற பணி ஓய்வு பாராட்டு விழாவில் சமீபத்தில் பணி ஓய்வு பெற்ற மாவட்ட பொருளாளர் தோழர் S.N.செல்வராஜ் மற்றும் மாவட்ட உதவி தலைவர் தோழர் M.பழனியப்பன் ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர்.

BSNL ஊழியர் சங்கத்தின் மாநில உதவி பொருளாளர் தோழர் R.மகேந்திரன், AIBDPA மாவட்ட அமைப்பாளர் தோழர் P.பக்கிரிசாமி, AIBDPA மாநில தணிக்கையாளர் தோழர் S.நடராஜா ஆகியோரின் வாழ்த்துரைக்கு பின்னர் அகில இந்திய, மாநில நிலைமைகளை விளக்கி மாநில செயலாளர் தோழர் S.செல்லப்பா நிறைவுரை ஆற்றினார்.

அதற்கு பின் நடைபெற்ற நிர்வாகிகள் தேர்வில் **மாவட்ட தலைவராக தோழர் A.இருதயராஜ், மாவட்ட செயலாளராக தோழர் D.சுப்ரமணியன், மாவட்ட பொருளாளராக தோழர் R.ரமணன்** உள்ளிட்ட நிர்வாகிகள் ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டனர். இறுதியில் வரவேற்புக்குழுவின் தலைவர் தோழர் K.பன்னீர்செல்வம் நன்றி கூறி மாநாட்டை நிறைவு செய்தார்.

தோழர்களின் பணி சிறக்க தமிழ் மாநில சங்கம் மனதார வாழ்த்துகிறது.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுள்ள,

S. Chellappa

**(S.செல்லப்பா)**